முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் விளையாட்டுச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

07.11.2018, புதன்கிழமை

1. **அறம் மிகுந்த அண்ணலே அரங்கா**
**ஆறுமுக சக்தியே ஞானதேசிகா**
**வரம் பெற்று ஞானசபை அமைத்து**
**வாழும் ஞானியே குருராசா**
2. அரசனே உன் பெருமை கூறி
அகிலமதில் ஒளி சூட்சும நூலை
வரமென **விளம்பி துலை திங்கள்**
**வகைபட மூவேழு திகதி புந்தி வாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 21ம் நாள் 07.11.2018, புதன்கிழமை)**
3. வாரமதில் விளையாட்டுச் சித்தரும்
வழங்கிடுவேன் உலகோர் நலமுற
சோரமில்லா மக்கள் படையை
சுத்தநெறி கொண்டு உருவாக்கும்
4. உருவாக்கும் அரங்க ஞானியை
உலகோர் வணங்கி வருதலுற
உருவாகும் ஞானயுகம்
உயர்வான தருமயுகம் அமையும்
5. அமையவே குமரகிரியென
ஆற்றல்பட அரங்கர் மலை
அமைத்து தான தருமமுடன்
அறிவிப்பேன் கோ பூசை நடத்தி
6. நடத்தியே மக்களை நோக்கி
ஞான உபதேசம் அருளும்
சுடர்மிக்க அரங்க ஞானியை
சூட்சுமம் அறிந்து தெளிய
7. தெளியவே கலியுக மக்கள்
தீட்சை ஏற்று தொடர்ந்து வர
அழியாமை உலகோர் அடைவர்
அரங்கன் அருள் தயவு கிட்டவே
8. கிட்டவே பெரும்பிணி ஏவலிடர்
குறைகள் அணுகா விலகி
இட்டமுடன் சகல வளமும் ஏற்றமும்
எல்லா பலமும் பெற்று சிறப்பர்
9. சிறப்புதரும் யோகியாக வந்த
சிவராஜ யோகி அரங்கனை
மறுப்பில்லா ஏற்று வருபவர்களே
மரணம் வெல்லும் சக்தி பெறுவர்

10. சக்திபட இல்லற ஞானியாக
சகலரும் ஞானவான்களாக உலகில்
பக்திபட முருகப்பெருமான் அருளால்
பாருலகோர் எல்லா வளமும் பெறுவர்

11. வளமருளும் ஞானியே அரங்கா
வரமருளும் தவசியே தேசிகா
காலமெல்லாம் உன்னை வணங்க
கலியுகத்தார் கடைத்தேறுவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் விளையாட்டுச்சித்தர் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா அறங்கள் செய்து தர்மம் பெருக்கிய அண்ணலே அரங்கமகா தேசிகனே ஆறுமுக அரங்கமகா தேசிக ஞான சக்தியே அநேகம் அநேகம் வரங்களைப் பெற்று ஞானசபை ஓங்காரக்குடிலை அமைத்து வாழும் மகா ஞானியே குருராசனே முருகப்பெருமானின் அவதாரமே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 21ம் நாள் 07.11.2018, புதன்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே விளையாட்டுச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் விளையாட்டுச்சித்தர்.

குற்றமற்ற வீண் போகாத மக்கள் படையை தொண்டர் படையாக சுத்தநெறியின் உதவியினால் உருவாக்குகின்ற ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியை உலக மக்களெல்லாம் பயபக்தியுடன் பணிந்து வணங்கிவர இக்கலியுகம் வலுவிழந்து ஞானயுகமாக உருவாகிடும் உயர்வான தர்மயுகமாக அமைந்திடும்.

உலகினில் ஞானயுகம் அமைந்திடவே ஆறுமுக அரங்கனும் குமரகிரி என்ற பெயரினில் ஆற்றல் மிக்கதான அரங்கர் மலைதனை உருவாக்கி தானதருமங்களுடன் கோ பூசைகளையும் நடத்தி உலக மக்களுக்கு ஞான உபதேசம் அளித்து அவர்களை குருநாதனாய் வழிநடத்தி செல்லும் ஆறுமுக அரங்க ஞானியை அவர்ததம் சூட்சுமங்களை அறிந்து உணர்ந்து தெளிந்திட வேண்டும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சூட்சுமங்களை அறிந்து தெளிய வேண்டுமாயின் அரங்கரின் திருவடி பணிந்து அர்ப்பணித்து பயபக்தியுடன் தீட்சை உபதேசம் அடைதல் வேண்டும். கலியுக மக்கள் அரங்கரிடத்து தீட்சை உபதேசம் அடைந்து அரங்க ஞானியை பின் தொடர்ந்து வரவர, அழியாமை என்கிற மரணமிலாப் பெருவாழ்வினை உலக மக்கள் அடைவார்கள். ஆறுமுக அரங்கன் தயவு கிடைத்திட்டால் அவர்களது வாழ்வினில் பிணிகள் வாராது. ஏவல்களினால் துன்பம் வராது. குறைகள் ஏதும் அணுகாது. அவர்கள் விரும்பியது கைகூடும் சகலவளமும் பெறுவார்கள். வாழ்வில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். சர்வபலம் பெற்று சிறப்படைவார்கள்.

எல்லா சிறப்புகளையும் தந்தருளுகின்ற மகா யோகியாக வந்திட்ட சிவராஜயோகி ஆறுமுக அரங்கனை மறுப்புகள் ஏதும் இன்றி சந்தேகம் இல்லாமல் நம்பிக்கையோடு ஏற்று வணங்கி வருபவர்கள் மட்டுமே மரணத்தை வெல்கின்ற சக்திகளை பெறுவார்கள்.

அரங்கனை முழுமனதாய் நம்பினோர் இல்லற ஞானியாகவும் வாழ்வர், சகல மக்களும் ஞானவான்களாக ஆகி முருகப்பெருமானின் அருளினால் எல்லா வளமும் பெற்று சிறப்படைவார்கள்.

சகல வளங்களையும் தந்தருளும் மகா ஞானியே அரங்கமகா தேசிகனே வரமருளும் மகா தவசியே ஞானதேசிகனே காலமெல்லாம் உமது திருவடி பற்றி உளமார பயபக்தியுடன் வணங்கினால் கலியுகத்தார்கள் கடைத்தேறுவார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறியக் கூறுகிறார் மகான் விளையாட்டுச்சித்தர்.

–சுபம்–